## திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# ஆவடி தெற்கு , கிழக்குப் பகுதி பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் மற்றும் திருமழிசை பேரூர் ஆகிய நிர்வாகம் வாரியாக மறுசீராய்வு கலந்தாய்வுக் கூட்டம்!

### மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை!



கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தலைமை கழக பிரதிநிதிகள் மாநில விவசாய தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா Ex MLA, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட ஆவடி தெற்கு பகுதி ஆவடி கிழக்கு பகுதி பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் மற்றும் திருமழிசை பேரூர் ஆகிய வட்டம் மற்றும் கிளை மறுசீராய்வு கலந்தாய்வுக் கூட்டம் பின்வரும் அட்டவணைப்படி நடைபெறும்.

**நாள் : இன்று (09-09-2026 புதன் கிழமை)**

| நேரம் | நிர்வாகம் | செயலாளர்கள் | இடம் |
|---|---|---|---|
| காலை 9 மணி | ஆவடி தெற்கு பகுதி | ஜி.ராஜேந்திரன் | வார் ரூம் ஆவடி ரயில் நிலைய அருகில் |
| காலை 11 மணி | ஆவடி கிழக்கு பகுதி | பேபிசேகர் | மோகினி மஹால் மணிகண்டபுரம் திருமுல்லைவாயில் |
| மாலை 4 மணி | பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | ப.ச.கமலேஷ் | கஸ்தூரி மஹால் சென்னீர்குப்பம் |
| மாலை 6 மணி | திருமழிசை பேரூர் | தி.வே.முனுசாமி | அண்ணா சமுதாயக்கூடம் காவல்ச்சேரி ரோடு |


மேற்கண்ட அட்டவணைப்படி நடைபெறும் மறுசீராய்வு கலந்தாய்வுக் கூட்டங்களில் அந்தந்த நிர்வாகங்களுக்குட்பட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், வட்ட கழக, கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு தங்களின் ஆலோசனைகளை வழங்கிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்

**ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.

## சென்னை மேற்கு மாவட்டம்

# ஆயிரம் விளக்கு, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி, அண்ணா நகர் ஆகிய தொகுதிகளின் வட்டம்- பகுதி வரையறை தொடர்பான தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



ஆகஸ்ட் 22. சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தின் முடிவின்படி சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் 06.09.2026 ஞாயிற்றுக்கிழமையன்று தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா.ஜெ. கான்ஸ்டண்டைன் ரவீந்திரன் எம்.பி., மற்றும் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலின்படி கீழ்க்கண்ட சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக வட்டம், பகுதி வரையறை தொடர்பான தொகுதி நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெறும் விவரம்.

| நாள் / நேரம் | தொகுதி | இடம் | முன்னிலை |
|---|---|---|---|
| 09.09.2026 புதன்கிழமை காலை 9 மணி | ஆயிரம் விளக்கு | அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கம் (தேனாம்பேட்டை, சென்னை) | மா.பா.அன்புதுரை வினோத் வேலாயுதம் ஆயிரம் விளக்கு கிழக்கு–மேற்கு பகுதிக் கழக செயலாளர்கள் |
| 10.09.2026 வியாழக்கிழமை காலை 9 மணி | சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி | M.S. ZARAA மஹால் (நியூ கல்லூரி அருகில், சென்னை) | எஸ்.மதன்மோகன் ஏஆர்பி.எம். காமராஜ் சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி பகுதிக் கழக செயலாளர்கள் |
| 11.09.2026 வெள்ளிக்கிழமை காலை 9 மணி | அண்ணா நகர் | ---- | ந. ராமலிங்கம் ச. பரமசிவம் அண்ணாநகர் தெற்கு–வடக்கு பகுதிக் கழக செயலாளர்கள் |

மேற்கண்ட கலந்தாய்வுக் கூட்டங்களில், அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதிக்கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், வட்டக்கழக நிர்வாகிகள் ஆகியோர் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: பகுதி, வட்டம் மறுசீரமைப்பு குறித்து

**நே.சிற்றரசு**
செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

## த.வெ.க. அரசின் அலட்சியத்தால்

# மேகமலை மக்களுக்கு பாதகமான தீர்ப்பு!

### தலைமைச் செயலகத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ. பேட்டி!

**சென்னை, செப்.9**

**சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ., “த.வெ.க. அரசின் அலட்சியத்தால் மேகமலை மக்களுக்கு இன்றைக்குப் பாதகமான தீர்ப்பு வரப்பெற்றுள்ளது” என்று குற்றஞ்சாட்டினார்.**

இப்பேட்டியின் போது முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி கூறியதாவது:-

“தேனி மாவட்டம் மேகமலைப் பகுதி, அது இன்றைக்கு ஒரு முக்கியப் பிரச்சினையாக உள்ள ஒரு சப்ஜெக்ட். அது முதன்முதலாக சிங்கம்பட்டி ஜமீனுக்குச் சொந்தமாக இருந்தது. சிங்கம்பட்டி ஜமீன் அதை பாம்பே பர்மா டிரேடிங் கார்ப்பரேஷனுக்காக மரம் வெட்டுதல், மற்ற தொழில்கள் செய்வதற்காக99 ஆண்டு குத்தகைக்கு விட்டார்கள். அங்கே சிங்கம்பட்டி ஜமீனால் அது குத்தகைக்கு விடப்பட்டது.

அன்றிலிருந்து அதிலே பலர் வேலை பார்த்தார்கள், ரிட்டயர்ட் ஆகியிருக்கிறார்கள். இன்றைக்கு 118 குடும்பங்கள் அங்கே வசித்துக்கொண்டிருக்கின்றன. அரசு ஊழியர்கள் எல்லாம் இருக்கிறார்கள். 4,300 பேர் மற்ற போக்குவரத்தோடு இருக்கும் ஒரு பகுதி. அதற்குச் சாலை வசதி, மற்ற வசதிகள் அனைத்துமே செய்து தரப்பட்டது. ஆனால் இடையிலே ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் எல்லாம் வந்ததனால், பல்வேறு சட்டச் சிக்கல்கள் அங்கே ஏற்பட்டன. அது சிங்கம்பட்டி ஜமீனுக்கும் அரசுக்கும் உண்டான பிரச்சினை.

ஆனால், அதை புலிகள் சரணாலயம், வனப் பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கொண்டு வருகிற பொழுது, அங்கே இருக்கக்கூடிய மக்களை வெளியேற்ற வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது.

எங்களுக்குக் கிடைத்த தகவல்படி,1924இல் இருந்து அவர்கள் இருப்பதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே, உயர்நீதிமன்றத்திலே எங்களுடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தக்கருத்துக்களை எல்லாம் எடுத்துக்கூறி வாதிட்டு, கடந்த 2024ஆம் ஆண்டு ஒரு சிறந்த தீர்ப்பைப் பெற்றோம்.



‘ஒரு ஸ்கீம் தயார் செய்ய வேண்டும். அந்த ஸ்கீம்படி அங்கே இருக்கும் மக்களுக்கு மாற்று இடங்கள் கொடுத்து, அவர்களுக்கு மாற்று வேலை ஏற்பாடுகள் செய்து, அவர்களைப் படிப்படியாக வெளியேற்ற வேண்டும்’ என்ற உத்தரவை நாங்கள் உயர்நீதிமன்றத்திலே பெற்றோம்.

**த.வெ.க. அரசின் கையாலாகாத்தனம்!**

ஆனால் கென்னடி என்பவர், உச்ச நீதிமன்றத்திலே சென்று இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்கிறார். அந்த மேல்முறையீட்டு வழக்கு 27.05.2026 அன்று விசாரணைக்கு வருகிறது. அப்பொழுது யாருடைய ஆட்சி? த.வெ.க. ஆட்சி.

ஆனால் அன்றைய தினம் ஒரு ‘சென்சிட்டிவ்’ஆன இந்த வழக்கிலே, ஒரு கால அவகாசம் கூடக் கேட்காமல், வீடியோ கான்ஃபரன்ஸ் மூலமாக ‘எடுத்தோம் கவிழ்த்தோம்’ என்ற முறையிலே அங்கே ஒழுங்கான சட்டப் பிரச்சினைகளை எடுத்து வைத்து த.வெ.க. அரசு வாதாடாத காரணத்தால் தான், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே, அந்த மேல்முறையீடு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ‘துணை ராணுவத்தைக் கொண்டாவது அவர்களை வெளியேற்ற வேண்டும்’ என்று தீர்ப்பு வந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு அடிப்படைகாரணம் தமிழக வெற்றிக் கழக அரசின் சட்டத்துறையின் கையாலாகாத்தனம் என்று சொன்னால், அது தவறே கிடையாது. ஏனென்றால் அவர்கள் வாய்தா வாங்கியிருக்க வேண்டும். 27ஆம் தேதி ஒழுங்காகச் செய்யவில்லை, 29ஆம் தேதி தீர்ப்பு வருகிறது.

**தி.மு.க. மீது பழிபோட மட்டுமே தெரிந்த த.வெ.க. அரசு!**

ஆனால், எதற்கு எடுத்தாலும் தி.மு.க. மீது பழிபோடுவது ஒன்றுதான் இன்றைக்குத் த.வெ.க.வின் கொள்கை. அதே கொள்கையை இதிலே சொல்கிறார்கள். நீங்கள் 2024 தீர்ப்பைப் பாருங்கள், அதைப்போல 2026 தீர்ப்பையும் பாருங்கள். எனவே 2024இல் அங்கே இருக்கும் மக்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் என்னென்ன முறையிலே வாதாடியிருக்கிறோம் என்பது தீர்ப்பிலேயே தெரியும்.

எனவேதான், உச்சநீதிமன்றம் அங்கே ஒரு நீதிமன்றஉதவியாளரை நியமித்தது, ஏனென்றால் எங்கே தமிழ்நாடு அரசு ஒருபக்கமாகச் சார்ந்துவிடுமோ என்று கூட அவர்கள் நினைத்தார்கள். ஆனால் நாங்கள் நீதிக்குத் தலைவணங்குபவர்கள். அதேநேரத்தில் மக்களுக்குத் துணையாக இருப்பவர்கள். நாங்கள் சட்டத்தையும் பாதுகாக்க வேண்டும், மக்களையும் பாதுகாக்க வேண்டும். இரண்டும் ஓர் அரசின் கடமை. அந்தக்கடமையை திராவிட முன்னேற்றக் கழகம் ஒழுங்காகச் செய்தது.

ஆனால், தமிழக வெற்றிக் கழகம் ‘எடுத்தேன் கவிழ்த்தேன்’ என்றசினிமா பாணியிலே போய், அதை நடத்தினார்கள். அந்தக்காரணத்தால்தான் இன்றைக்கு இந்த மேகமலைப் பிரச்சினையே ஏற்பட்டிருக்கிறது. ஒழுங்காக வாதங்களை எடுத்து வைத்திருப்பார்களேயானால் நிச்சயமாக உச்சநீதிமன்றத்தை நம்மால் கன்வின்ஸ் செய்திருக்க முடியும்.

நாம் வேறு ஒன்றும் சொல்லவில்லை, மாற்றிடம் கொடுத்துப் செய்கிறோம்என்ற ஸ்கீம் கேட்டிருந்தோம். அந்த ஸ்கீமை நம்மாலே உறுதிப்படுத்தி இருக்க முடியும். அதையெல்லாம் செய்யாமல் விட்டுவிட்டது, த.வெ.க. அரசின் கையாலாகாத்தனம். எனவே இன்றைக்கு மேகமலைப் பிரச்சினைக்கு முழுக்க முழுக்கப் பொறுப்பு விஜய் அரசின் கையாலாகாத்தனம்தான்.”

இவ்வாறு எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.

## பி.மோகன் தலைமையில் கே. கருணாகரன் முன்னிலையில்

# மாதவரம் வடக்குப் பகுதி வடபெரும்பாக்கத்தில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

### புழல் எம்.நாராயணன் வழங்கினார்!

மாதவரம், செப்.9-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் அன்னை வேளாங்கண்ணி மாதா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் 17வது வட்டம் வடபெரும்பாக்கம் கன்னியம்மன் கோயில் அருகே வேளாங்கண்ணி அன்னை மாதா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொது மக்கள் ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு 17 வது வார்டு வடபெரும்பாக்கம் சிறு தொழில் முனைவோர் சங்க தலைவர் பி. மோகன் தலைமை வகித்தார். சங்க நிர்வாகிகள் கே. பிரபு ராமன், அன்பழகன், வேல்ராஜ், சதீஷ், எஸ். ரவிக்குமார், எம்.,.மைக்கேல்,பி. செந்தில், இ. கார்த்திக், மாதவரம் வடக்கு பகுதி ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் அரியலூர் எஸ். நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சிகள் கலந்து கொண்ட மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் அவர்கள் பொது மக்கள் ஆயிரம் பேருக்கு சைவ பிரியாணி இனிப்புடன் வழங்கினார் பொதுமக்கள் வரிசையில் நின்று உணவைப் பெற்று மகிழ்ந்தனர்.

இந்த நிகழ்ச்சியில் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் எஸ். சிவக்குமார், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, எஸ். பாலாஜி,மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் டி. வினோத், ராஜ்குமார்,சின்ன தோப்பு ஜி. முனிவேல், எஸ். கமலநாதன், பாக முகவர்கள் டி. திவாகர், வி. சுமிர், எம் .கோவிந்தன், ஜி. கார்த்திக், தீயம்பாக்கம் எம். ஜான்சன்,இ. சுதர்சன், ஜி. பூபாலன், சந்தோஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.



பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் பகுதி கழக செயலாளர், மண்டல குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன்,வடக்கு பகுதி செயலாளர் திருநீர்மலை த.ஜெயக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.கூட்டத்தில் செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள், செப்டம்பர் 17 தந்தை பெரியார் பிறந்தநாள் விழா,கழகம் தோன்றிய நாள் குறித்தும், தலைமை கழகம் அறிவித்த மறு சீரமைப்பு குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும், ஆலோசிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றுப்பட்டது.

## விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி திமுக செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

செஞ்சி, செப்.9-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் சட்டமன்ற தொகுதிக்கான தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் ப.சேகர் தலைமையில், முன்னாள் மத்திய அமைச்சர் செஞ்சி இராமச்சந்திரன் முன்னிலையில் 10.09.2026 வியாழக்கிழமை மாலை 4.00மணி அளவில் திண்டிவனம் ஹோட்டல் ஆர்யாஸ் அருகில் உள்ள சங்கமித்ரா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் தலைமைக் கழகப் பிரதிநிதிகள், புதுவை மாநில தி.மு.க. அமைப்பாளர், புதுவை இரா.சிவா, மாநில மாணவரணி செயலாளர் ஜெ.வீரமணி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



பொருள்: 22.08.2026 அன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில்நடைபெற்ற தலைமை செயற்குழு கூட்டத்தில் அறிவித்த கழக நிர்வாக மறுசீரமைப்பு தீர்மானங்களை செயல்படுத்துதல் சம்பந்தமாக,

செப்டம்பர் - 15 பேறறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா, செப்டம்பர் - 17தந்தை பெரியார் பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடுவது சம்மந்தமாக,

செப்டம்பர் - 15 சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கழக நிர்வாகிகள் பங்கேற்பது சம்மந்தமாக,

கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு செஞ்சி மஸ்தான் அறிவித்துள்ளார்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் அன்னை வேளாங்கண்ணி மாதா பிறந்தநாளை முன்னிட்டு ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் 17 வது வட்டம் கன்னியம்மன் கோயில் அருகே வழங்கினார். வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் சிறு தொழில் முனைவோர் சங்க தலைவர்கள் பி. மோகன், கே. பிரபு ராமன், அன்பழகன், வேல்ராஜ், சதீஷ், செந்தில், கார்த்திக், எஸ். நாகராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.